# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 102 / 2022**

திருமதி N. அருணாதேவி,
19/2, வேலாயுத பாண்டியன் தெரு,
பழைய வண்ணார்பேட்டை,
சென்னை – 21.

………மேல்முறையீட்டாளர்
(திரு K. பெருமாள்)

எதிர்

செயற்பொறியாளர் /இ&ப/வியாசர்பாடி,
சென்னை மின் பகிர்மான வட்டம்/வடக்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/33 KV SS வியாசர்பாடி,
ராமலிங்கம் கோவில் எதிரில்,
வியாசர்பாடி, சென்னை – 600 039.

...... எதிர்மனுதாரர்
(திரு C. ஜெயசந்திரன், செயற்பொறியாளர் /இ&ப/வியாசர்பாடி )

**மனு பெறப்பட்ட நாள்: 05-12-2022**

**கேட்புரை நாள்: 15-02-2023**

**ஆணை நாள்: 21-02-2023**

05.12.2022 அன்று பெறப்பட்ட திருமதி N. அருணாதேவி, 19/2, வேலாயுத பாண்டியன் தெரு, பழைய வண்ணார்பேட்டை, சென்னை – 21 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 102/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 15.02.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள்

ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

நிபந்தனைகளுக்கு முரணாக பெறப்பட்ட ரூ.885/– ஐ திரும்ப வழங்குமாறும் இந்த காலதாமதத்திற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 தன்னுடைய மின் இணைப்பிற்கு கட்டணம் செலுத்துவதற்கான உரிய காலத்திற்குள் காசோலை வழங்கப்பட்டும் ரூ.885/–ஐ அபராதத்துடன் வசூலித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரிடம் பெறப்பட்ட காசோலையை உரிய நேரத்தில் வங்கியில் செலுத்தியதாகவும் ஆனால் வங்கியில் இருந்து காசோலையை திரும்ப அனுப்பப்பட்டு (cheque dishonoured) ரூ.885/– பிடித்தம் செய்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, மேற்கூறிய தொகையை திரும்ப வழங்கக் கோரி மேல்முறையீட்டாளர் சென்னை மின் பகிர்மான வட்டம்/வடக்கு, மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 01.06.2022 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சென்னை மின் பகிர்மான வட்டம்/வடக்கு, 29.10.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு:**

சென்னை மின் பகிர்மான வட்டம்/வடக்கு, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 29.10.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"Discussion in the forum*

*The Executive Engineer/O&M/Vyasarpadi reported vide letter dt. 21.10.2022 that the complaint was resolved and intimated to the petitioner.*

*Order*

*Since the grievance is redressed the petition is closed ."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 15.02.2023 அன்று நேரில் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு K. பெருமாள் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு C. ஜெயசந்திரன், செயற்பொறியாளர் /இ&ப/வியாசர்பாடி, சென்னை மின் பகிர்மான வட்டம்/வடக்கு அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 28.01.2022-க்குள் செலுத்த வேண்டிய மின் கட்டணத்தை 12.01.2022 அன்றே காசோலை மூலம் செலுத்தியுள்ளதாகவும், காசோலை முறையாக இருந்தும் வங்கி கணக்கில் போதிய பணம் இருந்தும் வங்கியில் இருந்து காசோலைக்கு பணம் இல்லை என்று சொல்லாமலும், அவர்களின் அலுவலக அலட்சியத்தால் 28.01.2022 அன்று குறுஞ்செய்தி மூலம் தன்னை அழைத்து மின் கட்டணத்துடன் ரூ.885/- அபராதம் வசூலித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 இது தொடர்பாக இரண்டு முறை புகார் அனுப்பியும் இது வரை எந்த பதிலும் வரவில்லை எனவும், அநியாயமாக அபராதம் வசூலித்துவிட்டு பதிலே சொல்லாமல் அமைதியாக இருப்பதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 15 நாட்கள் கையில் திரும்பிய காசோலையை வைத்திருந்து அபராதம் செலுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டதற்கு காலதாமதத்திற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும், நிபந்தனைகளுக்கு முரணாக பெறப்பட்ட ரூ.885/- ஐ திரும்ப வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 The Respondent has submitted that the LT A/C No.001-034-14, 001-034-15 and 001-034-170 and stand in the name of N.Arunadevi which are located at No.19 Velayudha Pandian street, Royapuram,Chennai-600 013.

6.2 The Respondent has submitted that the appellant paid the CC charges for the month of 12/2021 assessment for 3 services for an amount of Rs.6887/- vide cheque no.592194 (IOB) on 12.01.2022 and receipt was issued to consumer vide CHN001IA1Q398/12.01.2022.

| S.NO | Collection Date | S.C No | Cheque No | Amount |
|---|---|---|---|---|
| 1 | 12.01.2022 | 001-034-14 | 592194 | 5617 |
| 2 | 12.01.2022 | 001-034-15 | 592194 | 830 |
| 3 | 12.01.2022 | 001-034-170 | 592194 | 440 |
| Total | | | | 6887 |

6.3 The Respondent has submitted that the cheque was deposited to TANGEDCO A/C in Indian Bank, Washermenpet branch on 13.01.2022 by Royapuram card billing staff. But the same was dishonoured by the Indian Overseas Bank, Royapuram branch (consumer A/c maintained in this bank) and cheque was returned by IOB due to following reason "Kindly contact Drawer/Drawee Bank" on 14.01.2022.

6.4 The Respondent has submitted that same was informed to consumer on 27.01.2022 and request her to pay the CC Charges along with service charges towards cheque dishonoured. Reason for delayed message to consumer is due to Government holidays on 14.01.2022, 15.01.2022, 16.01.2022, 18.01.2022,

22.01.2022, 23.01.2022 and 26.01.2022.

6.5 The Respondent has submitted that the consumer, also paid the regular CC Charges Rs.6887/- of above said three LT A/C along with service charges towards cheque dishonoured of Rs.250/- for each LT A/C.nos and G.S.T on 28.01.2022.

The spilt up details of payment given below:-

| S.No | LT A/C.No | CC Charges for the month of 12/21 | Service charges for cheque | GST dishonoured | Total |
|---|---|---|---|---|---|
| 1 | 001-034-14 | Rs.5617/- | Rs.250/- | Rs.45/- | 5912 |
| 2 | 001-034-15 | Rs.830/- | Rs.250/- | Rs.45/- | 1125 |
| 3 | 001-034-170 | Rs.440/- | Rs.250/- | Rs.45/- | 735 |
| TOTAL | | | | | 7772 |

The above amount was collected vide receipt No.CHN001RSIS1430, CHN001RSIS1431 and CHN001RSIS11432 with respectively on 28.01.2022.

6.6 The Respondent has submitted that ,TNERC has permitted to collect the service charges towards cheque dishonoured under supply code clause 15(4) in that, "In case the cheque issued by consumer is dishonoured due to insufficient funds, the Low Tension consumer will be required to pay thereafter the amount due by cash/money order/demand draft only. The licenses shall have the powers to accord approval for restoring the cheque facility for payment by consumption charges atleast for the last three consecutive billing periods in respect of LT consumers and three months period in respect of HT consumers. The Licensee shall have the powers for restoration of cheque payment facility upto fourth occasion after watching the performance of the consumers in regard to subsequent settlement of charges. But if the cheque is dishonoured due to the reason, other than insufficient funds, the licensee shall have the powers for restoration of cheque payment facility upto fourth occasion without watching the performance of the consumers in regard to subsequent settlement of charges. All such consumers shall pay service charges as stipulated by the consumer in addition to the following:-

(a) Low Tension Consumers: Rs.300/-
(b) High Tension Consumers: Rs. 1000/-.
(c) The concession of restoration of cheque payment facility shall not be given thereafter for a service connection."

6.7 The Respondent has submitted that the TNERC revised the above service charges in miscellaneous charges order in MP No.7 of 2018 dt:03.10.2019 as Rs.250/- (irrespective of the amount of dishonoured cheque) charges for dishonoured cheques service charges.

6.8 Based on above order the service charges were collected from the consumer. Hence the Respondent has prayed to dismiss this appeal petition.

**7.0 <u>மின்குறை தீர்ப்பாளரின் தீர்வு:</u>**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் எண். 19/2, வேலாயுத பாண்டியன் தெரு, பழைய வண்ணார்பேட்டை, சென்னை – 21 என்ற முகவரியில் தனக்கு சொந்தமான மின் இணைப்பு எண்கள்.001–034–14, 001–034–15 மற்றும் 001–034–170 ஆகியவைகளுக்கு 28.01.2022 க்குள் செலுத்த வேண்டிய மின் கட்டணத்தை 12.01.2022 அன்றே காசோலை மூலம் செலுத்தியதாகவும், காசோலை முறையாக இருந்தும், வங்கி கணக்கில் போதிய பணம் இருந்தும், வங்கியில் இருந்து காசோலைக்கு பணம் இல்லை என்று சொல்லாமலும், எதிர்மனுதாரர் அலுவலக அலட்சியத்தால் 28.01.2022 அன்று குறுஞ்செய்தி மூலம் தன்னை அழைத்து மின் கட்டணத்துடன் ரூ.885/– அபராதம் செலுத்தியதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையில் மேல்முறையீட்டாளர் தனக்கு சொந்தமான மூன்று மின் இணைப்புகளுக்கும் 12/2021க்கான மின் கட்டணத்தை IOB வங்கி காசோலை எண்.592194 மூலமாக 12.1.2022 அன்று செலுத்தியதாகவும் 13.1.2022 அன்று அந்த காசோலை இராயபுரம் கார்டு பில்லிங் பணியாளர் மூலமாக இந்தியன் வங்கி, வண்ணாரப்பேட்டை கிளையில் உள்ள TANGEDCO கணக்கில் செலுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

7.4 அந்த காசோலை ஆனது IOB வங்கி, இராயபுரம் கிளையால் 14.1.2022 அன்று திருப்பி அனுப்பப்பட்டதாகவும் அதற்கான காரணம் "Kindly contact Drawer/Drawee Bank" என்று குறிப்பிடப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேல்முறையீட்டாளரின் காசோலை வங்கியில் ஏற்கப்படாமல் 14.01.2022 அன்று திருப்பப்பட்ட தகவல், தொடர்ந்து அரசு விடுமுறை நாட்கள் வந்த காரணத்தினால் (14.01.2022, 15.01.2022, 16.01.2022, 18.01.2022, 22.01.2022, 23.01.2022 மற்றும் 26.01.2022) தாமதமாக 27.01.2022 அன்று மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மின் கட்டணமாக செலுத்தப்பட்ட காசோலை நுகர்வோரின் வங்கியால் திருப்பப்பட்ட காரணத்தினால் அக்கட்டணத்தை செலுத்தும்போது மின் கட்டணத்துடன் திருப்பப்பட்ட காசோலை சேவைக் கட்டணம் மற்றும் GST தொகையும் சேர்த்து வசூலிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேல்முறையீட்டாளர் மின் கட்டணத்தை கெடு தேதியில் செலுத்திவிட்ட காரணத்தால் அபராத தொகை ஏதும் வசூலிக்கப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின்வழங்கல் விதி 5(10)ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> "5. பல்வகைக் கட்டணங்கள் :
>
> (10) **மதிப்பளிக்கப்படாத காசோலை சேவைக் கட்டணம் :**
>
> *நுகர்வோர் தந்த காசோலையை எந்தக் காரணத்துக்காக வங்கி திருப்பியனுப்ப நேர்ந்தாலும் அதற்கான சேவைக் கட்டணத்தை, ஆணையம் அவ்வப்போது குறிப்பிடும் கட்டண வீதத்தில் வசூலிக்க வேண்டும்."*

7.9 மேற்கண்ட விதியின்படி நுகர்வோர் செலுத்திய காசோலையை எந்தக் காரணத்துக்காக வங்கி திருப்பியனுப்ப நேர்ந்தாலும் அதற்கான சேவைக் கட்டணத்தை, ஆணையம் அவ்வப்போது குறிப்பிடும் கட்டண வீதத்தில் நுகர்வோரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும் என தெரியவருகிறது. இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் மின் கட்டணத்திற்கான காசோலையை எதிர்மனுதாரரிடம் செலுத்திய பிறகு அந்த

காசோலை திருப்பப்பட்ட தகவல் மேல்முறையீட்டாளருக்கு 27.01.2022 அன்றுதான் காலதாமதமாக எதிர்மனுதாரர் குறுஞ்செய்தி அனுப்பிய பிறகுதான் தெரிய வந்துள்ளது என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளர் மின் கட்டணத்திற்கான காசோலையை 12.01.2022 அன்று செலுத்திய பிறகு அதற்குண்டான பணம் தங்களுடைய வங்கி கணக்கிலிருந்து எடுக்கப்பட்டதா என கண்காணிக்க வேண்டிய சமபொருப்பு மேல்முறையீட்டாளருக்கும் உள்ளது. மேலும், இவ்வழக்கில் அபராத தொகை ஏதும் வசூலிக்கப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். எனவே, காசோலையை திருப்பப்பட்டதற்கான சேவைக் கட்டணம் ஆணையத்தால் குறிப்பிடுப்பட்ட கட்டண வீதத்தில் மேல்முறையீட்டாளரிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என தீர்வு செய்யப்படுகிறது.

8.0 <u>முடிவுரை</u>:

8.1 பத்தி 7–இல் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான 001–034–14, 001–034–15 மற்றும் 001–034–170–இல் வசூலிக்கப்பட்ட ரூ.885/– ஐ திரும்ப வழங்கக் கோரும் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண். 102/ 2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திருமதி N. அருணாதேவி, – By RPAD
19/2, வேலாயுத பாண்டியம் தெரு,
பழைய வண்ணார்பேட்டை,
சென்னை – 21.
அலைபேசி: 94444 41566

2. செயற்பொறியாளர் /இ&ப/வியாசர்பாடி,
சென்னை மின் பகிர்மான வட்டம்/வடக்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/33 KV SS வியாசர்பாடி,
ராமலிங்கம் கோவில் எதிரில்,
வியாசர்பாடி, சென்னை – 600 039.

3. மேற்பார்வை பொறியாளர், –By email
**சென்னை** மின் பகிர்மான வட்டம்/வடக்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தரைதளம், 5B பிளாக், 144, அண்ணா சாலை,
சென்னை – 600 002.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.